## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் திருச்சியில் ...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, இன்று அதை எடுக்க முடியாது. நீங்கள் காலையில்தான் அறிவிக்கை கொடுத்திருக்கிறீர்கள்.*

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### காவிரி நீரைத் தமிழகத்திற்குத் தர கர்நாடக அரசு மறுப்பதுடன் மேகதாது என்ற இடத்தில் புதிய அணை கட்ட முயற்சிப்பது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி காவிரியிலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்துவிட, கர்நாடக அரசு மறுப்பதுடன், காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில், புதிய அணை கட்ட முடிவு செய்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து தே.மு.தி.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ச. இராமச்சந்திரன், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் ஆகியோர் சட்டப் பேரவை விதி 55–இன் கீழும், தி.மு.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் கோவி. செழியன், திரு. க. அன்பழகன், திரு. அ. சௌந்தரபாண்டியன் ஆகியோர் சட்டப் பேரவை விதி 56–இன் கீழும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. கே. பாலகிருஷ்ணன் ஆகியோர் சட்டப் பேரவை விதி 55–இன் கீழும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. எஸ்.பி. முத்துக்குமரன், திரு. பி.எல். சுந்தரம், திரு. கு. லிங்கமுத்து ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 56–இன் கீழும், மனிதநேய மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு ஆகியோரும் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.*

*முற்பகல் 11–05*

*இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். தே.மு.தி.க. கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) யார் பேசப் போகிறீர்கள்? (குறுக்கீடு) இன்றைக்குத்தான் கொடுத்துள்ளீர்கள். தயவுசெய்து உட்காருங்கள். தே.மு.தி.க. கட்சியின் சார்பாகப் பேசவில்லையா நீங்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)*

**திரு. ச. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றுப் பிரச்சினை நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிற ஒன்று. அதோடுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே மிக முக்கியமான ஒன்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பிரச்சினையை நன்கு அறிவார்கள். ஆனால், இன்றைய தினம் கர்நாடக அரசியல் தலைவர்களின் போக்கு தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராக அமைந்துள்ளது என்பது மிகவும் கவலை தரக்கூடிய ஒன்றாகும். ஒரு சொட்டு தண்ணீர்கூட தமிழ்நாட்டுக்குத் தரமாட்டோம் என்று முழக்கமிடுகிறார்கள். நாம் ஏதோ அவர்களை ஒரு சொட்டு தண்ணீர் கேட்டதுபோலவும், அவர்கள் ஒரு சொட்டு தண்ணீர்கூட தரமாட்டோம் என்று சொல்கிறார்கள். உண்மையிலேயே கேட்பதற்கும், தருவதற்கும் அவர்களுக்கு மட்டுமே உரிமை என்று நினைப்பது தவறான போக்காகும். பொதுவாக நதிநீர்ப் பகிர்வு என்பது அந்தப் படுகையிலே உள்ள அத்தனை மக்களுக்கும் உரிமையுடையது. காவிரி ஆற்றுப் படுகை என்று சொல்கிறபோது, அதிலே வருகின்ற நீரைப் பகிர்ந்துகொள்கின்ற உரிமை காவிரி ஆற்றுப் படுகையிலுள்ள அத்தனை பேருக்கும் உண்டு. அந்த அடிப்படையில் கர்நாடகத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால் அவர்கள் ஒரு சொட்டு தண்ணீர்கூட தரமாட்டோம் என்று சொல்லி மக்களிடத்திலே பிரச்சினையை வளர்ப்பதன்மூலம் ஓர் உணர்ச்சியை தூண்டிவிடுகிறார்களோ என்கின்ற அச்சம் ஏற்படுகிறது.*

நாடுகளுக்கிடையே ஓடுகிற ஆறுகளை நதிநீர்ப் பகிர்வு என்ற அடிப்படையில் பகிர்ந்துகொள்கிறார்கள். மாநிலங்களுக்கிடையே ஓடுகின்ற ஆற்று நீரைப் பகிர்ந்துகொள்வதில் எந்தச் சிரமமும் இருக்கத் தேவையில்லை. ஓர் ஆற்றின் எல்லை என்பது இயற்கையானது. ஆனால் ஒரு மாநிலத்தின் எல்லையோ அல்லது நாட்டின் எல்லையோ மனிதர்களாகிய நாம் வகுத்துக்கொள்வது. ஆகையினாலேதான், ஆற்று நீரைப் பகிர்வு செய்துகொள்வதற்கு இயற்கை நியதியின்படி, சர்வதேச நெறிமுறைகளை வகுத்திருக்கின்றார்கள். காவிரி ஆற்றைப் பொறுத்தவரையில், தொன்றுதொட்டு காவிரி ஆற்று நீரைப் பகிர்ந்துகொள்வதற்கென்று ஒரு ஃபார்முலா—sharing arrangement—ஏற்கெனவே உள்ளது. அண்மையிலே காவிரி நடுவர் மன்றமும்கூட அதைப்பற்றி ஆராய்ந்து ஏற்கெனவே வாரத்திற்கு ஒரு முறை நீரைப் பகிர்ந்துகொள்ளலாம் என்ற நிலையை மாற்றி, 15 நாட்களுக்கு ஒரு முறை நீரைப் பகிர்ந்துகொள்வதற்கு வழிவகை செய்திருக்கின்றது. ஆக, மழை பெய்கிறபோது—இப்பொழுது கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் உச்ச நீதிமன்றத்திலேகூட பல தடவை சொல்லியிருக்கிறார்கள். “தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தருவதற்கு எங்களாலே எப்படி உத்தரவாதம் தரமுடியும்? மழை பெய்தால்தானே தண்ணீர் கிடைக்கும்? ஆகவே, இவ்வளவு தண்ணீர் தருவோம் என்பதற்கு எங்களாலே உத்தரவாதம் தரமுடியாது” என்பது கர்நாடகத்தினுடைய வாதம். ஆனால் ஏற்கெனவே இருந்த 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தமாயினும், அதற்குப் பிறகு காவிரி நடுவர் மன்றத்தினுடைய பரிந்துரையாயினும், அவற்றைப் பார்க்கிறபோது, அவ்வப்போது மழை பெய்கிறபொழுது அந்த நீரைப் பகிர்ந்துகொள்வதற்கு அட்டவணை இருக்கிறது. ஆகவே, பெய்கிற மழையைப் பகிர்ந்துகொள்கின்ற அட்டவணையை கர்நாடக அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுதான் நியதி, அதுதான் சர்வதேச நியதியும்கூட. ஆகையினாலே, அதை வற்புறுத்துகின்ற வகையிலேதான் இன்றைக்குத் தமிழக அரசின் சார்பிலே உச்ச நீதிமன்றத்திலேயும் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த நியாயத்தை உணரவேண்டும். அங்கே இருக்கின்ற மக்களைத் தூண்டிவிட்டு, தமிழ்நாட்டிற்கு எதிராகவோ அல்லது தமிழர்களுக்கு எதிராகவோ எத்தகைய பிரச்சினையையும் உருவாக்கக்கூடாது என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–10

'மேகதாது திட்டம்' என்று மற்ற திட்டங்களையெல்லாம் அவர்கள் போடுகிறார்கள் என்றால், கர்நாடகம் காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, தங்களுக்குப் போக தண்ணீர் மிச்சம் இருந்தால்தான் தமிழ்நாட்டிற்கு. அதை ஆங்கிலத்திலே சொல்வதானால், Theory of Sovereignty என்று சொல்வார்கள். அதெல்லாம் கடந்த காலம். ஒரு காலத்தில் Natural flow. காவிரி ஆற்றில் இயற்கையாக வருகிற தண்ணீர் என்கிறபோது, நமக்கு ஒரு Theory of Sovereignty என்றால், எனக்குப் போகத்தான் மற்றவர்களுக்கு என்று. ஆனால், இன்றைக்கு சர்வதேச நியதி அப்படியல்ல Natural flow–உம் கிடையாது, Theory of Sovereignty–யும் கிடையாது. Equitable Apportionment Theory; அதாவது சமமாகப் பங்கிட்டுக்கொள்வது. அந்த அடிப்படையிலேதான், இன்றைக்குத் தமிழ்நாடு தனக்குரிய நீர்ப் பங்கினை வற்புறுத்துகின்றது. அந்த நியாயத்தை ஏற்றுக்கொள்வதற்கு நம்முடைய தமிழக அரசு எடுக்கின்ற அத்தனை நடவடிக்கைகளுக்கும் நாங்கள் உறுதுணையாக இருப்போம். இன்னும் சொல்லப்போனால், நியாயங்களே வெற்றி பெற்றுவிடுவது இல்லை. நியாயங்களுக்கு வலிவு சேருகிறபோதுதான் வெற்றி கிடைக்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த அத்துணை மக்களும், அத்துணை அரசியல் கட்சியினரும் நிச்சயமாக இந்தக் காவிரி ஆற்றுப் பிரச்சினையில், தமிழக அரசோடு ஒன்றுபட்டு இருக்கின்றார்கள்; இருப்பார்கள் என்ற எதிர்பார்ப்போடு இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த நிலையைப்பற்றி அரசு என்ன கருதுகிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

'உணவெனப் படுவது நிலத்தொடு நீரே' என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே புறநானூற்றில் அழகாக எழுதியிருக்கிறார்கள். உணவு என்பது நிலமும், நீரும் சேர்ந்ததுதான். நீர் இல்லையென்றால் தமிழ்நாட்டிலே உணவு எப்படி உற்பத்தியாகும்? இத்தகைய மிகப் பெரிய ஓர் ஆபத்து எதிர்நோக்கி இருக்கிறது. ஆகவே, இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விழைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

2012 மார்ச் 30]

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி எண் 56–இன்கீழ் தமிழ்நாட்டு மக்களுடைய ஜீவாதாரப் பிரச்சினையாகக் கருதக்கூடிய காவிரி நீர்ப் பிரச்சினையை மையப்படுத்தி, வரலாற்றுப் புகழுடைய இந்த மாமன்றத்தில் நான் கலந்துகொண்டு கருத்துகளை எடுத்துச்சொல்வதற்கு அரிய வாய்ப்பினை வழங்கிய, திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர், தமிழகத்தின் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எங்கள் சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர், வரலாற்றுப் புகழுடைய சிறப்புமிக்கப் பட்டமாக கருதுகிற வாழ்நாள் மாண்புமிகு என்ற பட்டத்தைப் பெற்றிருக்கிற 'Kentucky Colonel' டாக்டர் தளபதி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், திரு. பரமேஸ்வர ராவ் அவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினையை மையப்படுத்தி, தமிழகத்திற்கு ஒரு சொட்டு தண்ணீர்கூட தர மாட்டோம் என்ற கருத்தை வலியுறுத்தி, கர்நாடக மாநில முதலமைச்சர், மரியாதைக்குரிய மாண்புமிகு சதானந்தகவுடா அவர்கள் அதே கருத்தை ஏற்றுக்கொண்டு அறிவித்திருக்கிறார். காவிரி நீர்ப் பிரச்சினை என்பது, ஏதோ ஒரு திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துகள் மட்டுமல்ல; சட்டமன்றப் பேரவையினுடைய எதிர்கட்சித் துணைத் தலைவர் குறிப்பிட்டதைப்போல, தமிழகத்தில் இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு, குரல் கொடுக்க வேண்டிய பிரச்சினை, இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினை. நடுவர் மன்றத் தீர்ப்பை கர்நாடக அரசு ஏற்க மறுக்கிறது என்பது எல்லா அரசியல் கட்சிகளும் தொடர்ந்து கண்டிப்பது வாடிக்கை.

1989 ஆம் ஆண்டு தமிழகத்தின் முதல்வராக டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றிருந்த நேரம், சமூக நீதிக் காவலர், முன்னாள் பாரதப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களிடம் வலியுறுத்தி, காவிரி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய நடுவர் மன்றத்தை அமைத்தார்கள். அதையொட்டி, 1991 ஆம் ஆண்டு, இடைக்காலத் தீர்ப்பாக 205 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டுமென முடிவெடுத்து, அதையும் முறைப்படி கர்நாடக அரசு வழங்காமல், 2007 ஆம் ஆண்டு இறுதித் தீர்ப்பாக 419 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டுமென்பதையும் மறுத்து, காவிரி நீர்ப் பிரச்சினையில் விவசாயிகள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள்.

[திரு. கோவி. செழியன்] [2012 மார்ச் 30

முற்பகல் 11–15

'சோழநாடு சோறுடைத்து' என்று பெருமையாகப் பேசுகிறோம். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என்ற நிலையை மாற்றி சேலம், கரூர், திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, நாகை போன்ற டெல்டா மாவட்டங்களில் வாழக்கூடிய விவசாயிகளின் 16,86,000 எக்டேர் விவசாய நிலம் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையிலும், ஜீவாதாரப் பிரச்சினையான குடிநீர்ப் பிரச்சினைக்கே தண்ணீர் இல்லை என்ற நிலையும் இருக்கின்ற இந்த நேரத்தில், கர்நாடக மாநில அரசினுடைய அறிவிப்பு 'வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதைப்போல்' அமைந்திருக்கிறது.

எப்படி இனப் பிரச்சினை என்றால் அல்லது மொழிப் பிரச்சினை என்றால் தமிழகத்தில் அரசியல் கட்சியினர் அனைத்தும் ஒன்று திரண்டு குரல் கொடுக்க எண்ணுகிறோமோ, அதைப்போல 'ஒரு சொட்டுத் தண்ணீர்' என்ற வார்த்தைதான் தமிழக விவசாயிகளை மிகவும் பாதிப்படைய வைத்திருக்கிறது. கர்நாடக மாநிலத்தில் அரசியல் கட்சிகள் வேறுபாடுகளைக் கடந்து எல்லா கட்சிகளும் ஒன்று திரண்டு தன் மண்ணின் பிரச்சினைக்கு உயிர்நாடியாகத் துடிப்பதைப்போல் சட்டப் பேரவையில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் இந்தக் கருத்தை வலியுறுத்த விரும்புகிறார்கள்; கருதுகிறார்கள்.

219 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டுமென்று சொன்னபோதுகூட, கர்நாடக அரசு 171 டி.எம்.சி. தண்ணீரைத்தான் தந்து கொண்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். ஜூன் மாதம் 12 ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட வேண்டும். அப்போதுதான் குறுவை விவசாயம் பாதிக்கப்படாமல் நடந்து கொண்டிருக்கும். ஆனால், ஜூன் மாதம் 12 ஆம் தேதி முறைப்படி அந்த மேட்டூர் அணை திறக்கப்படாத அவல நிலையையும் விவசாயிகள் அறிவார்கள். எனவே, கர்நாடக மாநில அரசினுடைய இந்தப் போக்கைக் கண்டிக்கக்கூடிய வகையில், முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் தமிழக அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, ஒரு முடிவு எடுத்ததைப்போல தமிழ்நாடு அரசு (குறுக்கீடு) இறுதிக் கோரிக்கைக்கு வந்து விட்டேன். பேரவைத் தலைவர் அவர்களே, இறுதிச் செய்தியாக, அரசியல் கட்சிகள் பாகுபாடு பார்க்காமல்...

2012 *மார்ச் 30]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் காவிரியிலிருந்து முல்லைப் பெரியாறுக்குப் போக வேண்டாம். காவிரியைப்பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சரித்திரத்திலேயே இந்த ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் தேதி தண்ணீர் திறந்து விடப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.*

**முனைவர் கோவி. செழியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கத்திலே நான் குறிப்பிட்டது, நம்முடைய ஒட்டுமொத்த நோக்கம் கர்நாடக அரசை நோக்கி இருக்க வேண்டும் என்பதுதான். 12 ஆம் தேதி திறக்கப்படுவது 6 ஆம் தேதி திறந்தால், ஒட்டுமொத்த டெல்டா மாவட்ட மக்கள் அதை வரவேற்பார்கள்; இந்த அரசைப் பாராட்டுவார்கள்; அது வேறு விஷயம்.*

*நாங்கள் மையக் கருத்தாகச் சொல்ல விரும்புவது, கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ், கம்யூனிஸ்டு, பிற கட்சிகள் அல்லது கன்னட அமைப்பைச் சார்ந்த வட்டாள் நாகராஜ் போன்றவர்கள் ஒன்று திரண்டு அந்த மாநிலத்தின் குரலை எழுப்புவதுபோல, முல்லைப் பெரியாறு பிரச்சினையில் இந்த அரசு எப்படி ஒட்டுமொத்தமாக அனைத்துக் கட்சிகளுடைய ஆதரவைப் பெற்றதுபோல, 'ஒரு சொட்டுத் தண்ணீர்கூட தரமாட்டோம்' என்று சொல்லுகிற அந்தக் கர்நாடக அரசை கண்டிக்கக்கூடிய வகையில், அனைத்துக் கட்சிகளும் ஒன்றுகூடி அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை உடனே கூட்டி, அவர்கள் சொல்லுகிற கருத்தை ஏற்று, மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலியுறுத்தி, என் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை ஏற்று மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

***திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி பிரச்சினையில் தொடர்ந்து கர்நாடக அரசினுடைய அணுகுமுறையால் தமிழகம் வஞ்சிக்கப்பட்டு வருவதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். நடுவர் மன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்பு 1991 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பிறகும், அதைக் கர்நாடக அரசு ஏற்று அமலாக்கவில்லை. 16 ஆண்டுகளுக்குப் பிறகு, நடுவர்மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பு 2007 ஆம் ஆண்டு வந்த பிறகும், அதை ஏற்று அமலாக்காமல், உச்ச நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்தார்கள். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு உள்ளிட்ட புதுவை, கேரள அரசுகளும் உச்ச நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்து, அந்த வழக்கு நிலுவையில் உள்ளது.*

*காவிரி நடுவர்மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பு, உத்தரவிலே ஒன்றை அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அதாவது அமலாகிற இந்த காலத்தில், மேல் மட்டத்திலே இருக்கின்ற மாநிலங்கள் கீழ்மட்டத்திலே இருக்கின்ற மாநிலங்களுக்கு, அதாவது தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்கு பாசனத்திற்கு எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கு இடையிலே எந்த பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடாது என்பதும் அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இவற்றையெல்லாம் மீறி கர்நாடக அரசு ஒவ்வோர் ஆண்டும் கோடைக் காலத்திலே பாசனம் செய்வதற்கு அவர்களுக்கு உரிமையில்லாத காலத்தில், காவிரி நீர்த்தேக்கத்திலே இருக்கிற தண்ணீரையெல்லாம் எடுத்து முழுமையாகப் பயன்படுத்தி, அந்தத் நீர்த் தேக்கங்களையெல்லாம் காலி செய்து விடுகிறார்கள். அதனாலே, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் மழை பெய்கிறபோது, கர்நாடக மாநிலத்திலுள்ள அணைகள் நிரம்பி தமிழகத்திற்குத் தண்ணீர் கிடைப்பதில் காலதாமதம் ஆகிறது. இதனால் கிட்டத்தட்ட கடந்த ஆண்டுகளில் பலமுறை மேட்டூர் அணையை நாம் ஜுன் 12 ஆம் தேதி திறப்பது தள்ளிப்போய், அதனாலே தமிழகத்திலே டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்வதில் பாதிப்பு ஏற்படுவதை நாம் நெடுங்காலமாக அனுபவித்து வந்திருக்கிறோம்.*

*முற்பகல் 11–20*

இந்த நேரத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பில், கர்நாடக அரசினுடைய இந்தப் போக்கு கோடைக்காலத்திலே கர்நாடக அரசு அங்குள்ள அணைகளிலே இருக்கிற நீரை எடுத்துப் பயன்படுத்த தடை விதிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்திலே தொடுத்திருக்கிற மனு நிச்சயமாக நியாயமானது. நம்முடைய உரிமையை வற்புறுத்துகிற அடிப்படையிலே அமைந்திருக்கிற மனு என்கிற முறையில் அதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உச்ச நீதிமன்றம் இது சம்பந்தமாக விவாதித்து முடிவு எடுக்க வேண்டிய சூழ்நிலையில், கர்நாடக அரசு, கர்நாடக சட்டமன்றத்தில் அங்கே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர், கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் உட்பட, இதைக் காரணம் காட்டி தமிழக அரசாங்கத்தையும், முதலமைச்சர் அவர்களையும் விமர்சிப்பது மட்டுமல்லாமல், ஒரு சொட்டுத் தண்ணீர்கூட தமிழகத்திற்குக் கொடுக்கக்கூடாது என்று அவர்கள் பேசியிருக்கிற அந்தப் பேச்சு, தமிழகத்திலே இருக்கிற பல இலட்சக்கணக்கான விவசாயிகளை ஆழ்ந்த கவலையிலே ஆழ்த்தியிருக்கிறது.

எனவே, இந்தச் சூழ்நிலையில், தமிழகத்திலே இருக்கிற அனைத்துக் கட்சிகளும், நாம் அனைவரும், ஒத்த கருத்தோடு இந்தக் காவிரி நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பை அமலாக்குவதை உருவாக்கக்கூடிய அதேநேரத்தில், இந்தக் கோடைக் காலத்திலே தண்ணீர் எடுக்காமல் அந்த அணையிலே இருக்கிற தண்ணீரைப் பாதுகாத்து ஜூன் 12 ஆம் தேதி தமிழகத்திற்குத் தண்ணீரைத் திறந்துவிடுகிற அந்த உரிமையைப் பெறுவதற்கு, நாம் ஒன்றுபட்டு குரல் எழுப்ப வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். எனவே, கர்நாடக அரசாங்கத்தின் சார்பில், அந்த முதலமைச்சர் அதை ஒரு அரசியல் பிரச்சினையாக்கி தமிழகத்திற்கும், கர்நாடகத்திற்கும் இடையிலே மோதல் போக்கைக் கடைபிடிப்பது எந்தவிதத்திலும் சரியான அணுகுமுறை அல்ல. அது இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க உதவி செய்யாது

என்பதைச் சுட்டிக்காட்டுகிற இந்த நேரத்தில், தமிழகத்திலே இருக்கிற அனைத்துக் கட்சிகளும் ஒன்று திரண்டு, தமிழக அரசுடன் இணைந்து இந்த உரிமையை நிலைநாட்டுவதற்கு நாம் ஒன்றுபட்டு செயல்படவேண்டும். அதனைத் தொடர்ந்து, இந்தச் சட்டமன்றத்தின்மூலமாக நாம் வலியுறுத்தவேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்குக் கிடைக்கவேண்டிய நியாமான தண்ணீரை, கர்நாடக அரசு வழங்க மறுப்பதும், தமிழகத்திற்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வழங்கக்கூடாது என்று மூன்று நாட்களுக்கு முன்பாக நடைபெற்ற கர்நாடக மாநில சட்டமன்றப் பேரவையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சரும் இணைந்து தமிழகத்திற்குக் கிடைக்கவேண்டிய நியாயமான, காவிரி நடுவர் மன்றத்தால் அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய தண்ணீரைக் கொடுக்கக்கூடாது என்று சட்டமன்றத்திலேயே எடுத்துச் சொல்லியிருப்பது என்பதும், தமிழகத்தினுடைய நலன்களை மறுப்பது மட்டுமல்ல; காவிரி டெல்டா பகுதியில் இருக்கக்கூடிய தமிழகத்தினுடைய விவசாயிகள் ஒட்டுமொத்தமாக பாதிக்கக்கூடிய அளவிற்கு அவர்களுடைய நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. கர்நாடக மாநிலத்தினுடைய நடவடிக்கை என்பது தமிழகத்திற்கும், கர்நாடகத்திற்கும் இடையே இருக்கக்கூடிய உறவுகளைப் பாதிக்கக்கூடிய முறையில், இந்தப் பிரச்சினையை வைத்துக்கொண்டு எடுக்கக்கூடிய நடவடிக்கை என்பது மாநிலத்திற்கு மாநிலம் ஏற்படக்கூடிய வேறுபாடுகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கையாக நான் கருதுகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு கட்டங்களில், பல்வேறு நடவடிக்கைகளை, ஒட்டுமொத்தமாக தமிழகத்தினுடைய நலன்களைப் பாதுகாப்பதற்கான முறையில், இந்தத் தமிழகத்தினுடைய சட்டமன்றத்திலேயே பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றி, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த மக்களினுடைய

2012 மார்ச் 30] *[திரு. எம். ஆறுமுகம்]*

*நலன்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.*

*இன்றைய தினம்கூட, பத்திரிக்கையிலே ஒரு செய்தியைப் பார்த்தபோது அதிர்ச்சியாகவே இருந்தது. நம்முடைய பாரதத்தினுடைய பிரதமர் அவர்கள், பாகிஸ்தான் அமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தி, 5,000 மெகாவாட் மின்சாரம் பாகிஸ்தானுக்குக் கொடுப்பது என்றும், அதேபோல இந்தியாவினுடைய மின்சார அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு ஷிண்டே அவர்கள் தமிழகத்திற்கு ஒரு யூனிட் மின்சாரம்கூட நான் வழங்கமாட்டேன் என்று சொல்லியிருக்கக்கூடிய செய்தி என்பது தமிழகத்தை ஒட்டுமொத்தமாகவே புறக்கணிப்பது என்கிற சூழல் உருவாகியிருப்பது என்பது நமக்கெல்லாம் கவலையளிக்கக்கூடிய செய்தியாகவே இருந்து கொண்டிருக்கிறது.*

*எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தமான நலன்களைப் பாதுகாக்கக்கூடிய முறையில் நமக்கு நடுவர்மன்றம் கொடுத்திருக்கக்கூடிய அந்தத் தீர்ப்பினை முழுமையாக அமல்படுத்தி, டெல்டா பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய நலன்களைப் பாதுகாக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் தமிழகத்திற்கும் கர்நாடகத்திற்கும் இடையே இருக்கக்கூடிய உறவுகளைப் பாதிக்கக்கூடிய முறையில் அது எந்த அமைப்பாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, கர்நாடகத்தில் யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழகத்திற்கு வஞ்சகம் செய்யக்கூடிய ஒரு நடவடிக்கையைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.*

*முற்பகல் 11–25*

*தமிழகத்தினுடைய சட்டமன்றத்தில் மட்டுமல்ல; உச்ச நீதிமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடுத்திருக்கக்கூடிய வழக்கு நியாயமான வழக்கு என்பதால், நாம் அவர்களுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும். தமிழகத்தினுடைய நலனைப் பாதுகாப்பதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுதியாக இருக்கும் என்ற அடிப்படையிலே, விதி 56–இன்கீழ் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தப் பிரச்சினையை நான் உங்கள் மத்தியிலே எடுத்துரைத்து அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நடுவர்மன்றம் பிப்ரவரி, 2007 ஆம் ஆண்டிலே வழங்கிய இறுதி உத்தரவுக்கு முற்றிலும் புறம்பாக, கோடைக் காலத்திலே காவிரி நீரைப் பயன்படுத்திக்கொள்ள கர்நாடக அரசு எடுத்துவரக்கூடிய முயற்சிகளை நன்கு உணர்ந்து, அதை முறியடிக்கக்கூடிய வகையிலே உச்ச நீதிமன்றத்தை நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நாடியிருப்பதை, தொடக்கத்திலேயே நான் வரவேற்கிறேன்.

மேட்டூர் அணை மூடப்படும் ஜனவரி மாதம் 28 ஆம் தேதிக்குப் பிறகு, தமிழ்நாடு மற்றும் கர்நாடகம் ஆகிய இரண்டு மாநிலங்களும் காவிரி தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தக்கூடாது என்று நடுவர்மன்றத் தீர்ப்பாணையம் தெளிவாகக் கூறியது. இந்த உத்தரவிற்குப் புறம்பாகத்தான் கோடைக் காலத்திலே தனது அணைகளில் மிஞ்சக்கூடிய தண்ணீரையெல்லாம் பயன்படுத்திவிட்டு, தென்மேற்குப் பருவமழை பொழியும் காலத்தில் தனது அணைகளைக் காலியாக வைக்கும் தந்திரத்தை, மோசமான தந்திரத்தை, மனித நேயமற்ற தந்திரத்தை கர்நாடக அரசு மேற்கொண்டுள்ளது. இதன் காரணமாக கர்நாடகத்திலுள்ள அணைகளிலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்துவிடுவது காலதாமதமாவதோடு மட்டுமல்லாமல், தென்மேற்குப் பருவமழை காலமான ஜூன் முதல் வாரத்திலே மழை பொழியாவிட்டால், மேட்டூர் அணையை உரிய நேரத்திலே திறக்க இயலாது. இதன் காரணமாகத் தமிழகத்திலே சுமார் 7 இலட்சம் ஏக்கர் குறுவை சாகுபடி பாதிக்கப்படக்கூடிய நிலையை கர்நாடக அரசு ஏற்படுத்தி இருக்கின்றது.

கர்நாடக சட்டமன்றத்திலே உள்ள கட்சித் தலைவர்கள் அனைவரும் தமிழகத்திற்கு எதிராக ஒட்டுமொத்தமாகக் குரல் கொடுத்திருக்கின்றார்கள். சட்டமன்றத்திற்கு வெளியிலே, தமிழகத்திலே அ.தி.மு.க. ஆட்சிக்கு வரும்போதெல்லாம் காவிரிப் பிரச்சினையை அரசியலாக்குகிறார்கள் என்று மிக மோசமான விமர்சனங்களையெல்லாம் செய்திருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உருவ பொம்மையை

எரிக்கக்கூடிய அளவிற்கு அங்கே தமிழர்களுக்கு எதிரான வெறியாட்டம் நடைபெற்று வரக்கூடிய சூழல் இருக்கிறது. இந்தப் பிரச்சினையிலே இரும்பு, எஃகு—வைப் போன்று தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து நமது உரிமைகளை நிலைநாட்டுவதற்கு முன்வர வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை இந்தத் தீர்மானம் வாயிலாக தெரிவித்து விடைபெறுகின்றேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதிய தமிழகம் கட்சியின் சார்பாக டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஜீவாதாரமாக விளங்கக்கூடிய காவிரிப் பிரச்சினையில் காவிரி நடுவர்மன்றத் தீர்ப்பிற்குப் பிறகு ஒரு முடிவு வந்ததாக எண்ணிக் கொண்டிருக்கக்கூடிய வேளையில், இப்பொழுது கர்நாடகம் மீண்டும் தன்னுடைய பழைய நிலையை மேற்கொள்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. குறிப்பாக, புதிய அணைகள் கட்டுவது அல்லது ஜனவரி மாதத்தின் இறுதியிலிருந்து மே மாதம் வரையிலும் கர்நாடகத்தில் இருக்கக்கூடிய அணைகளிலிருந்து எந்தக் காரணத்தைக் கொண்டும் விவசாயத்திற்கு நீரைப் பயன்படுத்தக்கூடாது என்ற தீர்ப்பு இருந்தாலும்கூட, அதையும் மீறி, கர்நாடகத்தில் இருக்கக்கூடிய அணைகளிலிருந்து கோடைக் கால விவசாயத்திற்காக நீரைப் பயன்படுத்துவதற்கு கர்நாடகம் முயற்சி செய்வதும், அதையொட்டி தேவையில்லாமல் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெயரைச் சுட்டிக்காட்டி, எப்பொழுதெல்லாம் இவர்கள் ஆட்சிக்கு வருகிறார்களோ அப்பொழுதெல்லாம் காவிரிப் பிரச்சினை என்று தேவையில்லாமல் சொல்வதும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

ஒரு மருத்துவரைப் பொறுத்தமட்டில், நோய் வந்த பிறகு சிகிச்சை அளிப்பதைக் காட்டிலும், அதற்கு முன்கூட்டியே சிகிச்சை அளிப்பதுதான், தடுப்பதுதான் சிறந்தது. அந்த வகையிலே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுடைய நலனைக் காக்கக்கூடிய வகையிலே நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். அதை நான் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

முற்பகல் 11–30

இப்போது நம்முடைய ஆதங்கம் எல்லாம், இரண்டு விஷயங்களை நாம் இப்போது தடுத்தாக வேண்டும். ஒன்று, கர்நாடகத்திலே புதிய அணை கட்டுவது; அதாவது, மேகதாது என்ற இடத்திலே அணை கட்டுவது. இரண்டாவது, கோடைக் காலத்திலே இந்த நீரைப் பயன்படுத்துவது. எனவே, இந்த இரண்டு விஷயங்களிலேயும் நாம் உறுதியான நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அந்த வகையில், இந்த மாமன்றத்திலே நாம் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். தேவைப்பட்டால், தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்தையும் கூட்டி, அவர்களுடைய ஆலோசனைகளையும் பெற்று—அனைவருடைய கருத்துகளையும் எப்படி மற்ற எல்லா விஷயங்களிலும் ஒருங்கிணைக்கின்றோமோ, அதைப்போல, இந்த நிகழ்ச்சியிலேயும் ஒருங்கிணைத்து, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த குரலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சருடைய பின்னாலே இருக்கிறது என்பதை உறுதி செய்ய வேண்டும். அதற்குப் புதிய தமிழகம் கட்சி, மாண்புமிகு தமிழக முதல்வருடைய நடவடிக்கைக்கு என்றைக்கும் உறுதுணையாக இருக்கும் என்பதைக் கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வற்றாத ஜீவ நதியான காவிரி ஆற்றின் சட்டபூர்வ உரிமையில், சட்ட விரோதமாக கர்நாடக அரசு புதிதாக அணைகளைக் கட்டியும், பாசன விளைநிலங்களின் பரப்பை விரிவுபடுத்தியும், குறிப்பாக, மேகதாது என்னும் அணைக்கட்டு திட்டத்தைத் தீர்மானித்து, அதனைக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டும் வருகிறது. ஏற்கெனவே, நடுவர்மன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்க மறுத்து வருகிற கர்நாடக அரசு; கர்நாடக அரசை நடுவர்மன்றத்தின் தீர்ப்பை அமல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்த மறுக்கிற மத்திய அரசு; இதுபோன்று தொடர்ந்து தமிழகத்தை வஞ்சித்து, நமக்கான தண்ணீரைத் தர மறுக்கும் கர்நாடகம். இந்த நிலையில், கடந்த வாரம் கர்நாடக சட்டமன்றத்தில் தமிழக அரசை ஆணவப் போக்கோடு விமர்சித்துள்ளார்கள்.

2012 மார்ச் 30] [திரு. உ. தனியரசு]

குறிப்பாக, கர்நாடக நீர்ப்பாசனத் துறை அமைச்சரே விமர்சித்திருக்கிறார். தமிழக அரசின் நீதிமன்ற வழக்கு முறையீட்டை சட்ட விரோதம் என்று பேசியிருக்கிறார்கள். கர்நாடகத்தின் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சித்தராமையா அவர்களே, "தமிழகத்திற்கு ஒரு சொட்டுத் தண்ணீரையும் தரக்கூடாது" என்று அழுத்தமாக வலியுறுத்தியிருக்கிறார். சட்டமன்றத்திலேயும் அனைத்துக் கட்சிகளும் அதை ஆமோதித்திருக்கின்றன. குறிப்பாக, ஆளும் பாரதிய ஜனதா கட்சி, மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சி உள்ளிட்ட தேசிய உணர்வுள்ள கட்சிகளே அதை ஆதரித்திருக்கின்றன; அதை ஆமோதித்திருக்கின்றன.

இதுபோன்ற செயல்களால், ஜனநாயகத்திற்கும், சட்டத்திற்கும் மதிப்பு தராமல், குறுகிய உள்ளூர் அரசியல் ஆதாயத்திற்காக தேசிய கட்சிகளான பிரதான கட்சிகளே, இப்படித் தொடர்ந்து தமிழகத்தையும், தமிழர்களையும் வஞ்சித்து வருகின்றன. தமிழக மக்களுக்கு விரோதமாக, தேச ஒற்றுமைக்கு விரோதமாகச் செயல்படுவதைக் கண்டிக்கிறேன். நம்முடைய தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய சட்டபூர்வமான தண்ணீரைப் பெறுவதற்கு நாம் உறுதியாக இருக்க வேண்டும். தேசியக் கட்சிகள் அப்படி கர்நாடக சட்டமன்றத்திலே பேசி வருவதால், தமிழகத்திலே வாழக்கூடிய 7 கோடி தமிழ் மக்களும், விவசாயத்திற்கான நீரைப் பயன்படுத்துவதிலே, குடிநீருக்கான நீரைப் பயன்படுத்துவதிலே நமக்கு ஏதேனும் பாதிப்பு வந்துவிடுமோ என்கின்ற ஓர் அச்சத்தில் இருக்கிறார்கள்.

இந்த நிலையில், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, காவிரி ஆற்றின் நீரில் நமக்கான தண்ணீரைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். "ஒரு சொட்டு நீரையும் நாங்கள் தமிழகத்திற்குத் தரமாட்டோம்" என்று திரு. சித்தராமையா சொன்னாலும், தமிழகத்தினுடைய, தாய்த் தமிழ் மண்ணினுடைய, 7 கோடி மக்களுடைய ஆட்சித் தலைவராக இருக்கிற எம் முதல்வர், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரின் அளவில் ஒரு சொட்டுத் தண்ணீரைக்கூட, பிறர் எவரொருவருக்கும் விட்டுத் தராமல், தமிழகத்தினுடைய உரிமையை மீட்டுத் தருவார்கள் (மேசையைத்

தட்டும் ஒலி) என்கின்ற நம்பிக்கையினை இன்று இந்தச் சட்டமன்றத்திலே நம்முடைய அனைத்துக் கட்சிகளும் வெளிப்படுத்தியிருக்கின்றன.

முற்பகல் 11–35

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால், கர்நாடகத்திலே இருக்கிற அரசியல் கட்சிகள் நமக்குச் சேரவேண்டிய, சட்டபூர்வமாகச் சேரவேண்டிய தண்ணீரை, அரசியல் ஆதாயத்திற்காகத் தராமல் தடுப்பது, இரு மாநில மக்களிடத்திலே ஒரு பதற்றத்தை, உணர்வலைகளை, மொழி, இனப் பாகுபாட்டை வளர்ப்பது என்பது அறிவுசார்ந்த, நவீன மானுட அரசியல் சமூகத்திற்கு எதிரானது என்பதைத் தெரிந்தே கர்நாடக அரசியல் கட்சிகள், குறிப்பாக, தேசிய கட்சிகள்—ஒற்றுமை உணர்வை வளர்க்க வேண்டிய கட்சிகள், தேச ஒற்றுமையை வளர்த்தெடுக்க வேண்டிய கட்சிகளேகூட—தேச ஒற்றுமைக்கு விரோதமாகச் செயல்படுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றன.

அது கேரளாவில் இருக்கிற அரசியல் கட்சியானாலும், கர்நாடகத்திலே இருக்கிற அரசியல் கட்சியானாலும் இதே நிலையைத் தொடர்ந்து செய்து வருகின்றன. ஆனால், தமிழகத்திலேதான், பிராந்தியக் கட்சிகள் இன, மொழி, உணர்வுள்ள மக்கள் என்று கருதுகின்ற நம்முடைய மக்கள்தான் 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்கின்ற உன்னத வரிகளைப் பின்பற்றுகின்றன என்பதை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் உலகத்திற்கே நிலைநிறுத்துகிறார். இன்னமும் தமிழர்களாகிய நாம், அந்த மூதுரையின் வடிவமாய், பொருளாய் இருந்து, அண்டை மாநிலங்களின், எந்த இனத்தையும், எந்த மொழி பேசுகின்ற மக்களையும் குறைத்தோ, விமர்சித்தோ, பகைமை பாராட்டாமல் இருக்கிற ஒரே நாடு, உலகத்திலேயே இந்தத் தாய் தமிழ்த் திருநாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட மதிப்புமிக்க இந்தத் தாய்த் தமிழ் மண்ணில் வாழுகிற 7 கோடி பேர்களுக்கு மேற்பட்டு இருக்கின்ற, மூத்த சமூகமாக இருக்கிற தமிழ்ச் சமூகத்தை எவர் வஞ்சித்தாலும்—மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இல்லாத இடைப்பட்ட காலக்கட்டத்திலே தமிழர்களின் உரிமை பறிபோய்

இருக்கலாம்; அது நில உரிமையோ, ஆற்று நீர் உரிமையோ, கச்சத்தீவு உரிமையோ, ஈழத் தமிழர்களுடைய வாழ்வுரிமையோ பறிபோய் இருக்கலாம்— (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற, ஆட்சித் துறை தலைவர் பொறுப்பிலே இருக்கின்ற ஒரு நொடியில்கூட தமிழர்களுடைய முடியளவு தன்மானம், சுயமரியாதை, கௌரவம் போன்ற உரிமைகள் மறுக்கப்பட்டதாக வரலாறுகள் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

காவிரி நீரை மீட்டுத் தந்த உரிமைத் தாய், காவிரித் தாய் (மேசையைத் தட்டும் ஒலி) என்று காவிரியின் உரிமையை மீட்டுத் தந்துள்ளவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோன்று, எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் முடியளவும் தமிழகத்திற்கான உரிமையில் சமரசம் செய்துகொள்ள மறுப்பவர், கர்நாடக, கேரளா ஆட்சியாளர்களோடு, அரசியல் கட்சிகளோடு, ஏதாவது கள்ள உறவு அல்லது ஆதாய உறவை வைத்துக் கொள்ளாதவர் நம் முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழர்களுக்கான உரிமையில் இவர் சமரசம் செய்துகொள்ள மாட்டார் என்பதற்காகவே கர்நாடக சட்டமன்றத்திலே தேவையில்லாமல்—உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது, நடுவர் நீதிமன்றத்திலே இருக்கிறது, அறிவுசார்ந்த நீதிபதிகள் அதுகுறித்துப் பரிசீலித்து வருகிறார்கள். ஆனால், மக்களுக்கு மொழி உணர்வை அல்லது பிராந்திய உணர்வை ஊட்டி, குறுகிய அரசியல் ஆதாயத்திற்காக தேசிய அரசியல் கட்சிகள், குறிப்பாக காங்கிரஸ், பாரதிய ஜனதா, மதச்சார்பற்ற ஜனதா தளம் போன்ற கட்சிகள் இந்த உணர்வைத் திட்டமிட்டே, தற்காலிகமாக இந்தப் பதற்றத்தை உருவாக்கி, நமக்கான ஆற்று நீர் உரிமையில் அவர்கள் தலையிட முயற்சிக்கிறார்கள். அவர்களுடைய முயற்சியைத் தடுத்து நிறுத்தி, நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தாய் அம்மா அவர்கள் நம்முடைய தமிழர்களுக்கான ஆற்று நீர் உரிமையை, குறிப்பாக, காவிர் ஆற்று நீர் உரிமையை, ஒரு சொட்டு நீரையும் பிறர் எவர் ஒருவரும், எந்தச் சூழ்நிலையிலும், எந்த வழியிலும் தடுத்து நிறுத்திவிட அனுமதிக்க மாட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத் தமிழ்நாடு சட்டமன்றமும், தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த மானுட சமூகமும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பின்பற்றி வழிநடக்கும்.

*இப்பிரச்சினையில் தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய கவனத்தை ஈர்த்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பங்கேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் காவிரியிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய உரிய பங்கு பெறப்பட வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்திப் பேசியுள்ளார்கள்.*

*காவிரி நடுவர் மன்றம் 5–2–2007 அன்று, தனது இறுதித் தீர்ப்பினை வழங்கியது. இந்த இறுதித் தீர்ப்பு மத்திய அரசிதழில் பிரசுரிக்கப்பட்டு இருக்க வேண்டும். அவ்வாறு, உடனே பிரசுரிக்கப்பட்டு இருந்தால், இந்த இறுதி ஆணை செயல் வடிவம் பெற்றிருக்கும். ஆனால், காவிரித் தாவாவில் தொடர்புடைய அனைத்து மாநிலங்கள், அதாவது, தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்கள் மற்றும் மத்திய அரசு இதுதொடர்பாக விளக்கங்கள் கேட்டு, காவிரி நடுவர்மன்றத்தை அணுகின. இதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் கேரள மாநிலங்களின் சார்பில் உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மேல்முறையீட்டு மனுவில் மத்திய அரசும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.*

*முற்பகல் 11–40*

*இந்தச் சூழ்நிலையில், 2011 ஆம் ஆண்டு மே மாதம் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, 14–6–2011 அன்று மாண்புமிகு பாரதப் பிரமமரை புது டெல்லியில் சந்தித்தபோது, காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடுவது; காவிரி மேலாண்மை வாரியத்தை அமைப்பது உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை அளித்தேன்.*

*காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடவும், காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்கவும், மத்திய நீர்வள அமைச்சகத்திற்கு அறிவுரை வழங்குமாறு*

2012 மார்ச் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

17–10–2011 அன்று நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு மீண்டும் கடிதம் மூலம் வலியுறுத்தினேன். ஆனால் இக்கோரிக்கை மத்திய அரசால் இதுநாள்வரை நிறைவேற்றப்படவில்லை. இதுகுறித்து, தமிழக அரசு மத்திய அரசைத் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி ஆணை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்படும் வரை, அதன் 25–6–1991 நாளிட்ட இடைக்கால ஆணை அமலில் இருக்கும் என்பது தமிழ்நாடு அரசின் நிலைப்பாடு. 16–10–2008 அன்று நடைபெற்ற காவிரிக் கண்காணிப்புக் குழுவின் 23ஆவது கூட்டத்தில் அதன் தலைவரும் இதே கருத்தை உறுதி செய்துள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள இடைக்கால ஆணையின்படி, நீரை விடுவிப்பதற்கான பாசன ஆண்டு என்பது ஜூன் மாதம் முதல் அடுத்த ஆண்டின் மே மாதம் வரை ஆகும். இம்முறையே காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி ஆணையிலும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. மேலும், நடுவர்மன்ற இறுதி ஆணையில், பாசன காலம் என்பது "ஜூன் 1ஆம் தேதி முதல் அடுத்த ஆண்டு ஜனவரி 31ஆம் நாள் வரை" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காவிரி நதிநீர்த் தாவாவினைக் காவிரி நடுவர்மன்றம் முடிவுக்குக் கொண்டுவந்த நிலையில், அதன் 25–6–1991ஆம் நாளிட்ட இடைக்கால ஆணை காலாவதி ஆகிவிட்டது என்றும், நடுவர்மன்றத்தின் இறுதி ஆணை இன்னமும் நடைமுறைக்கு வராத நிலையில், இடர்ப்பாடு காலத்தில் நீரைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் கர்நாடகாவில் பாசனம் மேற்கொள்ளுதல் உள்ளடக்கிய அனைத்து அம்சங்களுக்கும் இந்த இறுதி ஆணை ஒரு தற்காலிக ஏற்பாடாகவே இருக்கும்; அதாவது, Protem Governing Regime–ஆக இருக்கும் எனவும் கர்நாடக அரசு கருத்து தெரிவித்து வருகிறது.

கர்நாடக அரசு இக்கருத்தைக் கூறிய போதிலும், நடுவர்மன்றத்தின் இடைக்கால ஆணைப்படியோ அல்லது இறுதி ஆணைப்படியோ தமிழ்நாட்டுக்கு நீர் வழங்குவதில்லை. கர்நாடக அரசு தன்னுடைய நீர்த்தேக்கங்களில் எல்லா நீர்வரத்தையும் தேக்கி உபரி நீரை மட்டுமே தமிழ்நாட்டிற்கு வழங்கி வருகிறது.

கர்நாடக அரசு நேர்மையற்ற வகையில், பிப்ரவரி முதல் மே மாதம் வரையில் தனது கோடைக்காலப் பாசனத்திற்காக அதன் நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறது. கர்நாடகத்தின் கருத்துப்படி, தற்காலிக ஏற்பாடாக இருக்கும் காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி ஆணையை பின்பற்றினால் கோடைகாலப் பயிர்ப் பாசனத்திற்கு நீர் பயன்படுத்தக் கூடாது. ஆனால், கடந்த 2007–2008 முதல் 2010–2011 ஆம் ஆண்டு வரையில், கர்நாடகாவின் 4 பெரிய நீர்த்தேக்கங்களிலிருந்து அதாவது ஹேரங்கி, ஹேமாவதி, கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி அணைகளிலிருந்து, கோடைகாலப் பாசனத்திற்காக பிப்ரவரி முதல் மே வரையில் 42 டி.ம்.சி. அடி முதல் 73 டி.எம்.சி. அடி வரை நீரினைப் பயன்படுத்தியுள்ளது.

இவ்வாறு கோடைக்காலப் பாசனத்திற்காக நீரைப் பயன்படுத்தாமல், அடுத்த பாசனப் பருவகால உபயோகத்திற்கு கர்நாடக அரசு நீரைத் தேக்கி வைத்திருக்க வேண்டும்.

இதைத் தவிர, காவிரி நடுவர்மன்றம் அதன் இறுதி ஆணையில் கர்நாடக அரசு அதன் நான்கு பெரிய நீர்த்தேக்கங்களிலிருந்தும் பாசன காலத்தில் நீரைப் பயன்படுத்திக்கொள்ள ஆண்டொன்றிற்கு மொத்தமாக ஒதுக்கீடு செய்துள்ள 103.240 டி.எம்.சி. அடிக்கு பதிலாக 203 டி.எம்.சி. அடி வரை நீரினைப் பயன்படுத்தியுள்ளது.

மேலும், தமிழகத்திற்கு குறுவை சாகுபடிக்குத் தண்ணீர் அவசியம் தேவையான ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் காவிரி நடுவர்மன்ற ஆணையின்படி தண்ணீரை வழங்குவதில்லை.

கர்நாடக அரசு கோடைக்காலப் பாசனத்திற்கு நீரைப் பயன்படுத்துவதால் பருவமழை தொடங்கியவுடன் எல்லா நீர்வரத்தையும் தன் நீர்த்தேக்கங்களில் தேக்கி அவை நிரம்பிய பின்னரே தமிழகத்திற்கு நீர் வழங்குகிறது. இதனால் மேட்டூர் அணைக்கு நியாயப்படி வந்து சேர வேண்டிய தண்ணீர் பெறப்படுவதில்லை.

எனவேதான், தமிழகத்தின் உரிமையைப் பாதுகாக்கவும், விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டும், கர்நாடக அரசு பிப்ரவரி முதல் மே மாதம் வரையில் கோடைக்காலப் பாசனத்திற்கு அதன் 4 நீர்த்தேக்கங்களிலிருந்து நீரைப் பயன்படுத்தக்

2012 மார்ச் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கூடாது என உத்தரவு வழங்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் ஓர் இடைக்கால மனுவினை 21–3–2012 அன்று எனது தலைமையிலான தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–45

காவிரி நீரில் தமிழகத்திற்கு உரிய பங்கைப் பெறுவதில், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவதில் நானும், எனது அரசும் உறுதியுடன் செயல்படுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசும்போது மேகதாதுவில் கர்நாடக அரசு புதிய அணை கட்டுவதாகக் குறிப்பிட்டார்கள். காவிரி நதியில், கிருஷ்ணராஜசாகர் மற்றும் மேட்டூர் அணைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் சிவசமுத்திரம், மேகதாது, ராசிமணல் மற்றும் ஒகேனக்கல் எனும் இடங்களில் புனல் மின் திட்டங்களைச் செயல்படுத்த தேசிய நீர் மின் கழகம் கருதியது. இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஓர் ஒப்பந்தத்தை சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு மத்திய மின் அமைச்சகம் 1999–இல் அனுப்பி வைத்தது.

தமிழ்நாடு அரசு, 2004 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில், முதல் நிலையாக, சிவசமுத்திரம் மற்றும் ஒகேனக்கல் நீர் மின் திட்டங்களுக்கான அனுமதியைப் பெற்ற பின்னர் ஒரே சமயத்தில் இதற்கான பணிகள் தொடங்கப்பட வேண்டும்; இரண்டாவது நிலையாக, இதே அடிப்படையில் மேகதாது மற்றும் ராசிமணல் நீர்மின் திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்; இந்த 4 புனல் மின் திட்டங்களை தேசிய நீர் மின் கழகம் செயல்படுத்த வேண்டும் ஆகிய நிபந்தனைகளை விதித்து, மேற்படி ஒப்பந்தத்திற்கு இசைவு அளித்தது.

கர்நாடக அரசு ஜனவரி 2001–இல் இதற்கு இசைவு அளித்த போதிலும், பின்னர் சிவசமுத்திரம் மற்றும் மேகதாது புனல் மின் நிலையங்கள் அம்மாநில எல்லைக்குள் இருப்பதால் அவைகளை அவ்வரசே செயல்படுத்த உத்தேசித்துள்ளதாகத் தெரிவித்தது. தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் பன்மாநில நதியான காவிரி ஆற்றின் குறுக்கே எந்தவொரு திட்டத்தையும் கர்நாடக அரசு தன்னிச்சையாக மேற்கொள்ள இயலாது என்று அவ்வரசிற்குத் தமிழக அரசால் தெரிவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், இதுகுறித்து தமிழ்நாடு அரசு நவம்பர் 2008–இல் உச்ச நீதிமன்றத்தில் ஓர் இடைக்கால மனுவினைத் தாக்கல் செய்துள்ளது. இதில் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மேல்முறையீட்டு மனுக்கள் மற்றும் காவிரி நடுவர்மன்றத்தின் முன் நிலுவையிலுள்ள விளக்கம் கோரும் மனுக்கள் ஆகியன முடிவுக்கு வரும்வரையில், கர்நாடக அரசு சிவசமுத்திரம் மற்றும் மேகதாது புனல் மின் திட்டங்களைச் செயல்படுத்தக்கூடாது என்றும்; தேசிய நீர் மின் கழகமோ அல்லது மத்திய அரசின் மற்ற தகுந்த மின் உற்பத்தி நிறுவனமோ இந்த 4 புனல் மின் திட்டங்களையும் செயல்படுத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு கோரிக்கை வைத்துள்ளது. இவ்வழக்கு நிலுவையில் உள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் கர்நாடகத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் கர்நாடக அரசு தமிழ்நாட்டின் இசைவைப் பெறாமல் புதிய அணையைக் கட்ட இயலாது. அவ்வாறு கர்நாடக அரசு முயற்சிக்குமேயானால் தமிழகம் அதனை எந்தச் சூழ்நிலையிலும் அனுமதிக்காது என்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

## 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.